
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | மார்ச் 1989 | இதழ் 3

பரிசுத்த




வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2. மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.



## இதழின் உள்ளே...


1. மௌன பாவம். 1

2. ஒழுங்கு படுத்துவோம்.

3. சாத்தானின் வார்த்தைகள். 9

4. இயேசுவின் சிலுவை மரணம்: பகைவர்களுடைய சூழ்ச்சியின் வெற்றியா? 12

5. பேதுருவின் மாமியார். 15

6. கர்த்தருடைய பந்தி - ஆசரிப்பு முறை. 17

7. கல்வாரியிலிருந்து கன்மலைவரை. 23

# THIRUMARAI AASAAN

**Editor:** E. Z. SELVANAYAGAM

**Honorary Editor** J. C. CHOATE

**Published by Church of Christ**

**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 2. March 1989 Issue 3

**ஆசிரியவுரை**

# மௌன பாவம்

கர்த்தராகிய இயேசு, நியாயம் விசாரிக்கப்படும்படி பிரதான ஆசாரியர் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பொழுது, அவருடைய சீஷர்களைப் பற்றியும், அவருடைய உபதேசங்களைப் பற்றியும் கேள்வி கேட்கப்பட்டன. (யோவான் 18:19-21) இவைகளைப்பற்றித் தெரிந்திருந்தும் அதைப் பற்றி அவரிடத்தில் கேள்வி கேட்டது வேண்டாத வேலை என்று நினைத்த ஆண்டவர், அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் எதிர்க்கேள்வி கேட்டதுமன்றி நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடம் விசாரியும் என்று நறுக்கென்று பதில் அளித்தார். அதைச் செவி மடுத்த ஓர் அதிகாரி, பிரதான ஆசாரியனுக்கு இப்படியா பதில் சொல்வது? என்று இயேசுவை கன்னத்தில் அறைந்தான் (வ. 22)

இயேசு, அந்த அதிகாரியின் அடாத செயலைக் கண்டித்து நான் தகாத விதமாய்ப் பேசினதுண்டானால் தகாததை ஒப்புவி, நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில் என்னை ஏன் அடிக்கிறாய்? '' என்று கேட்டார் (வ 23). சில பேர் இந்த சம்பவத்தைச் சுட்டிக் காட்டி '' ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு (மத் 5:39) என்று போதித்த ஆண்டவருடைய நடவடிக்கை முரண்படுகிறதே. மறு கன்னத்தையும் திருப்பிக் கொடுக்காமல் அவனிடத்தில் நியாயம் கேட்கிறாரே என்பர். அப்படிப்பட்டவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் கய் N. வுட்ஸ் என்னும் வேத அறிஞர் யோவான் சுவிசேஷ வியாக்கியான நூலில், மார்ட்டின் லூதர் அவர்கள் சொன்ன கருத்தை மேற்கோள் காட்டி, கிறிஸ்து கையால்

பதில் செய்வதைத் தான் கூடாது என்று சொன்னாரேயன்றி வாயால் பதில் செய்யக் கூடாது என்று சொல்லவில்லை என்கிறார்.

ஆம், சகோதரர்களே. சாந்தமும் பொறுமையும் அன்பும் நிறைந்த ஆண்டவர் எப்பொழுதெல்லாம் தவறு நடந்ததோ அப்பொழுதெல்லாம் அதைக் கண்டிக்கத் தவறவில்லை. பாவத்தைக் கண்டு கொள்ளாமல் வாய் மூடி மௌனியாக இருப்பதைக் காட்டிலும் கோழைத்தனமும், மாய் மாலத்தனமுமான பாவம் வேறொன்றும் இருக்க முடியாது.

பல சந்தர்ப்பங்களில் நேர்மைக்காக எழுந்து நின்று போராடுவதற்கு மிகுந்த தைரியம் தேவை. இந்த விஷயத்தில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் அஞ்சாநெஞ்சம் பாராட்டத்தகுந்தவை. அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் மக்களின் பாவங்களையும் தேவ விரோதக் காரியங்களையும் கடுமையாகச் சாடி தங்களுடைய பணியை நேர்மையாகச் செய்தார்கள். தீர்க்கன் மீகா "நானோ யாக்கோபுக்கு அவன் மீறுதலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன் என்று கூறுகிறார் (மீகா 3:8) அதே போன்று அவர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு தீர்க்கன் ஏசாயா "சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே, எக் காலத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதல்களையும் யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி என்கிறார் (ஏசாயா 58:1)

அவர்கள் இப்படித் தைரியமாக மக்களுடைய பாவங்களை கடுமையாகக் கண்டித்து பிரசங்கித்ததால் பெரிய இடத்துப் பொல்லாப்புகளைத் தேடிக் கொண்டு துன்பங்களை அனுபவித்தனர் என்பதை நாம் அறிவோம் இருந்தாலும் அவைகளைப் பரிசுத்த ஆவியானவர் பொறுக்கி எடுத்து வேத எழுத்துக்களில் பொறித்திருக்கிறார். ஏன் என்றால் அவர்களைப் போல கர்த்தருடைய பணியைச் செய்ய அழைக்கப்பட்டு இருக்கிற நாமும் கூட தைரியமாய் பாவத்துக்கு எதிராக போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் (எபி 11:32-12:4)

நீங்கள் நீதிக்காக எழுந்து நின்று போராடும் இயல்புடையவர்களா? அப்படியானால் நீதியின்நிமித்தம் துன்பம் அனுபவித்த உண்மையுள்ள தீர்க்கதரிசிகளைப் பின்பற்றி நீங்களும் நடக்க வேண்டும். (ரோமர் 15:4) இதைக் குறித்து யாக்கோபு "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்புறுத்தலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள்" (யாக் 5;10) என்கிறார்.

மீண்டும் புதிய ஏற்பாட்டில், மேசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தப் படுத்த அனுப்பப்பட்ட ஒட்டக மயிர் உடை அணிந்து காட்டுத் தேனையும் வெட்டுக் கிளியையும் உணவாக்கிக் கொண்டவனும் (மத் 3:4) எலியாவின் ஆவியை உடையவனுமாகிய யோவான் ஸ்நானகன், அந்நாளில் அதிகார பீடத்தில் அமர்ந்திருந்த பரிசேயர்களையும், வேதபாரகர்களையும், சதுசேயர்களையும் ''விரியன் பாம்புக் குட்டிகளே," நீங்கள் மனந்திரும்பாற் போனால் எரிநகரத்தில் தள்ளப் படுவது நிச்சயம். என்று கர்ஜிக்கிறார் மத் 3:1-12, 11:14.

அரசனும் கூட யோவானின் சொல்லடிக்குத் தப்பமுடியவில்லை. விபச்சாரம் பெருகி விட்ட இந்தக் காலத்தில், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு ஏன்?' என்ற மனநிலையோடு சம்பந்தப்பட்டவர்களின் காதுக்குள்ளே போய் முணுமுணுக்கும் ஒரு விஷயத்தை இவர் பகிரங்கமாக 'நீர் அவளை வைத்துக்கொள்வது நியாயமல்ல' என்று குற்றம் காட்டுகிறார். ஆம், ஏரோது அரசன் தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியோடு வாழ்ந்தது நியாயப் பிரமாணத்துக்கு விரோதமானது. அரசனே விபசாரக் குற்றவாளியாக இருந்தால் மக்கள் நீதியின் வழி நடப்பது எப்படி? யோவான் அதைத் தட்டி கேட்ட காரணத்தால் அவர் தலை துண்டிக்கப்பட்டது. ஆம், சகோதரர்களே! பாவத்தைக் கண்டிக்கத் துணிவு இல்லாமல் நம் தலை உடலோட்டு ஒட்டிக் கொண்டிருப்பதை விட நாம் சத்தியத்தைப் பிரசங்கத்ததினால் நம் தலை துண்டிக்கப்பட்டு தட்டில் வைக்கப்படுவது மேல். நீர் இயேசு கிறிஸ்துவின் சுவிஷேத்தைப் பிரசங்கம் செய்யும் உண்மையுள்ள ஊழியனா? ஆம் என்பது உமது பதில் ஆனால் யோவான் ஸ்நானகனின் சீரிய முன்மாதிரியைப் பின் பற்று.

இயேசு கிறிஸ்து யூதரின் நியாயஸ்தலத்துக்கு முன்பாக விசாரணைக்கு நிறுத்தப்பட்டதைப் போல பவுல் அப்போஸ்தலன் கூட நிறுத்தப் பட்டார். அப்பொழுது பவுலும் இயேசுவின் அடிச் சுவட்டையே பின் பற்றினார். புற ஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக ஏற்படுத்தப்பட்ட இந்த அப்போஸ்தலன் உண்மையாகவே ஒப்பு நோக்க முடியாத கர்த்தருடைய ஊழியக்காரன் என்பதில் சந்தேகமில்லை.

ரோமாபுரியில் சக்கரவர்த்தி சீசருக்கு முன்பாக முதல் விசை விசாரிக்கப்பட நின்ற பொழுது ஒருவரும் அவனுடன் கூட இருக்கவில்லை. என்று கூறுகிறார் (2 தீமோ 4:16) இருந்தாலும் அவர் பெற்ற அந்த தைரியம் அவருக்கு எங்கிருந்து வந்தது என்பதை அவருடைய வாயாலேயே சொல்லுகிறார், கேளுங்கள் '' கர்த்தரே எனக்குத் துணை நின்றார்'' என்கிறார் ( 2தீமோ 4:17 ) அப்பொழுது மட்டுமல்ல, எப்பொழுதுமே அவர் ஊழியத்துக்கு அழைக்கப்பட நேரத்திலிருந்தே அவருடைய பெலனும் நம்பிக்கையும் கர்த்தரே. (பிலி 1:17; 4:13)

அதனால்தான் தன் இறுதி நாட்களில் பவுல் "நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்' என்று சொல்ல முடிந்தது (2 தீமோ 4:7) நீங்கள் உத்தம இருதயத்தோடு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிற தாயிருந்தால் அவரைப் பின் தொடர்ந்து நீங்களும் நித்தியத்தை அவரோடு கழிக்க முடியும்.

நீங்கள் உண்மையாய்ச் சத்தியத்தைப் போதிக்கிறவர்களா யிருந்தால் வேதாகமத்தில் உள்ள எந்தக் காரியத்தையும் மறைத்து வைக்கக் கூடாது. (அப் 20:27) நாம் விசுவாசிக்கிற. போதிக்கிற, கடைப்பிடிக்கிற அனைத்துக் காரியங்களுக்கும் வேதாகம அங்கீகாரம் இருக்க வேண்டும். (கொலோ 3;17) எந்த ஒரு தனி நபரானாலும், எந் நிறத்தவரானாலும், குழு அல்லது கூட்டத்தாரானாலும், அவர்கள் உறவினரோ, நண்பரோ சபையைச் சார்ந்தவர்களோ. பட்டம் பெற்றவர்களோ, பதவியிலுள்ளவர்களோ எவரானாலும் சரி; தவறான உபதேசங்களைப் போதித்தால் அவர்களுடைய தவறைச் சுட்டிக் காட்டுவதற்கு தயங்கவே கூடாது. அப்படிச் செய்கிறவர்களுக்குக் கிடைக்கும் வெகுமதி எப்படிப்பட்டதாயிருக்கும் என்று தெரியாமல் இல்லை. தவறு இழைக்கிற மக்கள்திரள் தங்கள் செல்வாக்கு, பணபலம் ஆள் பலம், ஆட்சி பலம். ஆகியவற்றைக் காட்டி, மிரட்டி, பல முனை களிலும் நமக்குப் பிரச்னைகளை உருவாக்குவார்கள். துன்பம் செய்வார் கள். அது ஒன்றும் புதிய விஷயம் அல்ல, ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்'' என்று அன்றே சொல்லப்பட்டுத் தானே இருக்கிறது (2 தீமோ 3;12) சத்தியத்தைப் போதித்ததினால் துன்புறுத்தப்பட்ட இயேசு. தீர்க்கர்கள், யோவான் ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் ஆகியவர்களை விட நீங்கள் மேலானவர்களல்லவே! அவர்களுடைய பாடுகளுக்கு நீங்களும் பங்காளிகளாகி அவர்களுடைய ஆசீர்வாதத்திலும் பங்கடையுங்கள். 2தீமோ 2:12;

E. Z. செல்வநாயகம்.

---

**எல்லா அவயவங்களையும் கட்டுப்பாட்டில் வை.**

எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள்; அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.

வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.

உன் கண்கள் நேராய் நோக்கக் கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக் கடவது.

உன் கால்நடையைச் சீர்தூக்கிப்பார். உன் வழிகளெல்லாம் நிலைவரப் பட்டிருப்பதாக

வலது புறமாவது இடது புறமாவது சாயாதே; உன் கால்களைத் தீமைக்கு விலக்குவாயாக.

# ஒழுங்கு படுத்துவோம்.

ஒரு காரியத்தைச் சிறப்பாகவும், சீராகவும் செய்ய வேண்டும் என்றால் சில ஒழுக்க நியதியைப் பின் பற்ற வேண்டும். இது வியாபாரம் கல்வித் துறை. என்று மட்டுமல்லாமல் அனைத்துத் துறைகளுக்கும் பொருந்தும். மார்க்க சம்பந்தமான விஷயங்களிலும் இதுவே உண்மை. நமது கர்த்தர் இயேசு கிறிஸ்துவும் தன் சபையைக் கட்டுவதற்கு இச் சட்டத்தையே கடைப்பிடித்தார், அவரே சபைக்குத் தலையாக இருந்த போதிலும் (எபே 5:23; கொலோ 1:18)பிராந்திய சபையை நடத்திச் செல்வதற்கு மூப்பர்கள், உதவிக்காரர்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு சபையும் சுதந்தரமாக செயல்பட வேண்டும் என்று வழி காட்டினார். அந்த மூப்பர்களும், உதவிக்காரர்களும் அவ்வித ஊழியத்தை மேற் கொள்வதற்கு சில தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும். (1 தீமோ 3; தீத்து)

அப்படிப்பட்ட பணியை மேற்கொள்ளும் மூப்பர்கள், சபை அங்கத்தினர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரங்களைக் கொடுத்து தவறுகளைக் கண்டித்து, பலவீனரைத் தாங்கி, உதவி தேவைப்படுகிறவர்களுக்கு ஒத்தாசை செய்து விசுவாசத்தில் குறைவுள்ளவர்களை உற்சாகப்படுத்தி சபை ஆவியிலே வளர்வதற்கு முயற்சிக்க வேண்டும். அது மாத்திரமல்ல. சத்தியத்தை அறியாததால் அழிந்து போய்க் கொண்டிருக்கிற அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் அக்கறையுள்ளவர் களாகவும் இருக்க வேண்டும்.

உதவிக்காரர்கள், இப்பணியில் மூப்பர்களுக்கு உதவியாக இருந்து அவர்களுடைய ஆலோசனைகளை நிறைவேற்றப் பாடுபட வேண்டும். சபை ஒரு தனி மனிதனுடைய ஆதிக்கத்துக்குள் அடங்கிப் போய் விடாதபடி ஒன்றுக்கு மேற்பட்ட தகுதியுள்ள நபர்களை மூப்பர்களாக ஏற்படுத்த வேண்டும் என்று வேதம் போதிக்கிறது. உதவிக்காரர்கள் விஷயத்திலும் இதே விதிகள்தான் பின்பற்றப் பட வேண்டும். அப்படி உயர்த்தப்பட்ட மூப்பர்களும், சபை உறுப்பினர்களுடன் அதிகார தோரணையோடு நடந்து கொள்ளாமல் அவர்களுக்கு முன் மாதிரியான வாழ்க்கையின் மூலமாக வழி காட்டிகளாக இருக்க வேண்டும்.

பேதுரு தனது முதலாம் நிருபத்தில் உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறது என்னவென்றால்

உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல. மனப் பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்

தி-2

திற்காக அல்ல—உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல—மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் என்று குறிப்பிடுகிறார் 1 பேதுரு 5;1—4.

இப்படிச் சொல்லும் போது இன்னும் குழந்தைப் பருவத்தில் உள்ள சபை, எண்ணிக்கையில் குறைவாயுள்ள சபை, மேற் கூறிய மூப்பர்களுக்குரிய தகுதியடையாத நபர்கள் அடங்கிய சபை ஆகியவைகளின் நிர்வாக முறை எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு கேள்வி எழுகிறது. அப்படிப்பட்ட நிலையில் உள்ள சபைகள் மூப்பர்கள் உதவிக்காரர்கள் இன்றியே இயங்க வேண்டியது தான். வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள மூப்பர் மற்றும் உதவிக்காரர்களுடைய தகுதியை உடையவர்கள் இல்லாத ஒரு சபை தனக்கும் மூப்பர்கள், உதவிக்காரர்கள் வேண்டும் என்பதற்காக தகுதியில்லாத நபர்களை அக்கனமான பதவிகளுக்கு நியமிக்கக் கூடாது. அப்படி நியமித்தால் அவர்கள் அப் பதவிகளைத் தவறாகவும், முறைகேடாகவும் பயன் படுத்த ஏது வாகும். தகுதியில்லாத நபர்களை மூப்பர்களாகவும், உதவிக்காரர்களுமாக ஏற்படுத்துவதை விட, மூப்பர்களும், உதவிக்காரர்களும் இல்லாமலே இருந்து விடுவது மேல். அது வரையிலும் தற்காலிகமாக சபையில் உள்ள ஆண் அங்கத்தினர்களே கூட்டுப் பொறுப்பாக காரியங்களை நடத்திச் செல்லலாம். அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் கூட்டம்கூடி யார் யார் என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும். சபையின் பணப் பொறுப்புகளை யார் வசம் ஒப்படைக்கலாம் என்று முடிவு செய்து செயல்படலாம். இப்படிப்பட்ட கூட்டங்களை பொருளாதார அலுவல் கூட்டம் என்பர். அந்தக் கூட்டத்தில் இரண்டொருவரையோ அல்லது மேற்பட்டவர்களையோ சபையின் காரியங்களாகிய பிரசங்கம் செய்தல், கர்த்தருடைய பந்தி நடத்துதல் நடத்துனர் பொறுப்பேற்றுக் கொள்ளுதல், ஞாயிறு, பள்ளி நடத்துதல், வேத ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல் போன்ற பற்பல வேலைகளுக்கு நியமித்து அவைகளைக் கண் காணிக்கலாம். அப்படிப் பட்டவர்களை நிர்வாகக் குழுவினர் என்று சொல்லலாம், எல்லாருமே காரியங்களைச் செய்ய முற்பட்டால் எனக்கென்ன உனக்கென்ன என்று போட்டு விடுவார்கள். கடைசி நேரத்தில் எல்லாம் குழப்பமாகப் போய் விடும், ஆகவே சபையில் உள்ள ஆண் அங்கத்தினர்களிடையே பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு இன்னின்னார் இதை இதைச் செய்ய வேண்டும் என்று ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு சபையில் அங்கத்தினர்கள் குறைவாக இருந்தாலும் வேலைகள் எல்லாம் ஏறக் குறைய பெரிய சபைகளில் உள்ளதைப் போல் தான் இருக்கும், உதாரணமாக சபை எந்த நேரத்தில் கூடி ஆராதிக்க வேண்டும், வேத ஆய்வு வகுப்பு என்றைக்கு நடத்தப்பட வேண்டும் என்கிற காரியங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும், ஒரு முடிவுக்கு வந்த பிறகு அவற்றை ஒழுங்காக செயல்படுத்த வேண்டும். அப்படி

ஒழுங்காக செயல்படாவிட்டால் அங்கத்தினர்கள் குறிப்பாக புதிதாக சபைக்கு வருகிறவர்கள் நம்முடைய ஒழுங்கின்மையைப் பார்த்து, கர்த்தருடைய காரியத்தில் இவர்களுக்கு அக்கறையும் ஈடுபாடும் இல்லையே என்று எண்ணி விலகிவிடுவர். வருகை குறையும்! வேலை பாதிக்கப்படும். மேலும், சபையை முன்னின்று நடத்துபவர்கள் ஒழுங்கின்றி, ஆத்தும பாரமின்றிச் செயல்பட்டால் சபை உறுப்பினர்கள் நம்பிக்கையிழந்து சோர்வடைந்து விடுவார்கள்.

சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் அவரவர்கள் தகுதிக்கேற்ப பயன்படுத்தப் பட ஒரு தெளிவான திட்டம் இருக்க வேண்டும். சகோதரிமார்கள் கர்த்தருடைய பந்திக்குத் தேவையான அப்பம் திராட்சை இரசம் தயாரிப்பதிலும், ஞாயிறு பள்ளி நடத்துவதிலும், பெண்களை உற்சாகப்படுத்திப் போதிப்பதிலும், தனிப்பட்ட முறையில் வீடுகளைச் சந்தித்து பக்தி விருத்தி அடையச் செய்வதிலும், வருகிறவர்களை உபசரித்து அன்பு காட்டுதல், சபைக் கூடங்களைச் சுத்தம் செய்தல், இருக்கைகளை ஒழுங்கு படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படலாம்.

சபையின் முக்கிய அலுவல்களான சுவிசேஷப் பிரகடனம், அவ்வப்பொழுது நற்செய்திக் கூட்டங்கள், சிறப்பு வகுப்புகள் நடத்தி அங்கத்தினர்களின் வேதஅறிவை அபிவிருத்தி செய்தல், நோயாளிகளைப் போய்ப் பார்த்து ஆறுதல் சொல்லுதல், விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களைப் பார்த்து உற்சாகப்படுத்துதல், நகரத்தின் இதர பாகங்களிலும், கிராமப்புறங்களிலும் சிறப்புக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், சூழ்நிலைக்கும், தனிப்பட்ட நபர்களின் சரீர, ஆவிக்குரிய தேவைகளில் உதவி செய்தல் போன்றவைகளை ஆண் அங்கத்தினர்கள் செய்யலாம். சபைக்கு என்று ஒரு கட்டிடம் கட்டவும், அங்கத்தினர்கள் வளர்ந்து மூப்பர்கள், உதவிக்காரர்கள் போன்ற தகுதிகளையடையவும் திட்டம் தீட்டலாமே! சபையின் பொருளாதாரத்தின் ஒரு பகுதியை எடுத்து ஒன்று அல்லது மேற்பட்ட நபர்களுக்கு பண உதவி செய்து முழுநேரம் ஊழியம் செய்யும்படி ஏற்பாடு செய்யலாம். உடனே அப்படிச் செய்ய முடியா விட்டாலும் ஆரம்பத்தில் பகுதி நேர ஊழியர்களை நியமித்து சபை வளர்ச்சிக்கு பாடுபடும்படி ஏற்பாடு செய்யலாம்.

சபைக்கு உள்ளூரிலும், உலகம் முழுவதிலும் பெரும்பணி இருக்கிறது. நாட்களோ குறுகியது. சுமார் 400 கோடி மக்களுக்கு இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். நாம் எவ்வாறு இப்பெரும் பணியைச் செய்ய முடியும்? நமக்கு அதைப்பற்றிய தரிசனமும், விசுவாசமும், வைராக்கியமும், தீர்மானமும் தேவை. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒன்றுபட்டு இம் மாபெரும் பணியை நிறைவேற்ற வேண்டும். ஒருவருக்கொருவர் அன்புடனும், இணக்கமாகவும்

பொறுப்புகளை பகிர்ந்து கொண்டும், நாம் இப்பணியில் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும். இது நிறைவேற நம்முடைய நேரத்தையும் பணத்தையும் ஏன் நம்முடைய உயிரையே கூட அர்ப்பணிக்க நேரிடலாம். ஆனால் அப்படிப்பட்ட தியாகம் செய்வதற்கு இதைவிட சிறந்த பணி என்ன உள்ளது? நாம் கடவுளை நம்முடைய வாழ்வில் முதன்மைப்படுத்தி, ஆத்தும ஆதாயமே இந்த உலகத்தில் நாம் சேர்க்க முடிகிற ஆஸ்தி என்று எண்ணி கர்த்தர் தம்முடைய சபை எவ்வாறு இயங்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அப்படிச் செய்தால் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். கர்த்தர் நமக்கு இவ்வுலகத்திலும் மறுமையிலும் நமக்கு அளிப்பேன் என்று வாக்கு செய்ததை நமக்கு நிச்சயம் கொடுப்பார்.

இவைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு, முதலாவது நம்மை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும் நாம் நம்முடைய நேரத்தையும் பணத்தையும் மிச்சம் பிடித்து கர்த்தருடைய காரியத்துக்கு அதை பயன்படுத்தப் பழக வேண்டும். நாம் நம்முடைய வாழ்க்கையில் கர்த்தருடைய காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து, உலகக் காரியங்களைப் பின்னுக்குத் தள்ள வேண்டும். நாம் எதை விசுவாசிக்கிறோம், ஏன் விசுவாசிக்கிறோம் என்று புரிந்து கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதை நாம் கடைபிடிக்க வேண்டும்.

நாம் நம்முடைய குடும்ப வாழ்க்கையிலும், சமுதாயத்திலும் சபையிலும் எப்படிப்பட்ட அந்தஸ்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்த்து, கிறிஸ்துவின் மகிமைக்காக நம்முடைய ஈடுபாட்டை அதிகப்படுத்திக் கொள்ள முயல வேண்டும். நாம் கர்த்தருக்கு நம்மை ஒப்புக் கொடுத்து விடும் பொழுது நமக்கு அது ஆசீர்வதமாக இருக்கும். அழிந்து போகிற, நீடிய பயன் தராத, மாயைத் தோற்றமுடைய காரியங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பது நம்முடைய வாழ்நாளை வீணாக்கி விட்டதற்கு ஒப்பாகும் கர்த்தர்தாமே நம்மை பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு முன்மாதிரியாக, நம்மை நாமே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்து வாழும் படியும் நமக்காகப் பாடுபட்டு மரித்து நமக்கு நித்திய ஜீவன் பெறும் நம்பிக்கையை அருளினவர்க்கு பிரியமாயும் நடக்க உதவி செய்வாராக!

J. C சோட்

---

## செய்யக் கூடாதவைகள்.

நன்மை செய்வதற்கு உனக்கு வாய்ப்புக் கிட்டினால் அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி, நீ போய்த் திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே.

அச்சமின்றி உன்னோடு உறவு வைத்துக் கொண்டிருக்கிறவனுக்கு விரோதமாய் தீங்கு நினையாதே.

ஒருவன் உனக்குத் தீங்கு செய்யாதிருக்க காரணமின்றி அவனோடே வழக்காடாதே.

கொடுமைக் காரனின் மேல் பொறாமை கொள்ளாதே அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதே.

# சாத்தானின் வார்த்தைகள், (Satanic Verses)

தலைப்பைப் பார்த்துப் பயப்படாதீர்கள்! இந்தத் தலைப்பு நீங்கள் பயப்படுகிற மாதிரி பிரச்னைக்குரியதோ அல்லது சர்ச்சைக்குரியதோ அல்ல. ஆனால் இக்கட்டுரையில் நாம் படிக்கப் போகும் சாத்தானும் அவன் வார்த்தைகளும் பிரச்சனைக்குரியவைகள் என்பதில் சந்தேகம் இல்லை,

வேதாகமத்தில் இரு பெரிய சக்திகளைப் பார்க்கிறோம். ஒன்று தூயசக்தி-அதாவது தேவன்; மற்றொன்று தீயசக்தி-அதாவது சாத்தான் தேவன் மனிதகுலத்தை நேசிக்கிறவர் – இரட்சிக்கிறவர்; சாத்தான் மனிதகுலத்தை வெறுக்கிறவன் - வஞ்சித்து மோசம் போக்குகிறவன். பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தைகள் மட்டுமின்றி சாத்தானின் வார்த்தைகளும் இடம் பெற்றிருக்கின்றன. தேவனுடைய வார்த்தைகள் எங்கு காணப்பட்டாலும் அவைகள் மனிதகுலத்துக்கு நன்மையையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வருகிறது, மாறாக சாத்தானின் வார்த்தைகளோ எப்போதும் தீமை பயப்பனவாகவும் சாபத்தைக் கொண்டு வருபவைகளாகவும் இருக்கிறதைக் கவனிக்கலாம். இவைகள் நமக்குத் தெரிவிக்கிற உண்மை என்னவெனில், சாத்தானுடைய வார்த்தைகள் தேவ வார்த்தைகளுக்கு எதிரிடையானவைகளாகவும் முரண்பாடானவைகளாகவும் இருக்கும் என்பதாகும். இந்த உண்மையை வேதத்திலும், நடைமுறை வாழ்க்கையிலும் நாம் எளிதாகக் கண்டு கொள்ளலாம், உதாரணத்துக்கு சில.

ஆதி மனுஷனும், மனுஷியுமாகிய ஆதாம் ஏவாளைச் சிருஷ்டித்த தேவன் அவர்கள் செய்யத்தக்கவைகளையும் செய்யத்தகாதவைகளையும் குறித்து அறிவுறுத்தியிருந்தார். ஆனால் அவர்களோடு தந்திரமாகத் தொடர்பு கொண்டு தேவனுடைய ஆலோசனைகளுக்கு விரோதமாக அதாவது தேவன் கூடாது என்று விலக்கின கனிகளைத் தின்னும்படி தூண்டுகிறான்.

அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன? அது மிகவும் பயங்கரமானது. சாத்தானின் வார்த்தைகள் கேட்பதற்கு இனிமையாகவும் கவர்ச்சியாகவும் இருக்கலாம், ஆனால் அதன் முடிவு மிகவும் கொடூரமானதாக இருக்கும். (ஆதி 3-ம் அதிகாரம்)

இன்னொரு சம்பவத்தைக் கூடப் பார்ப்போம், இஸ்ரவேலின் புகழ் பெற்ற அரசன் தாவீது. அவன் அரசோச்சிய நாட்களில் தேவனுக்குப் பயந்து மக்களின் நல் வாழ்வுக்குத் தேவையான பல நல்ல காரியங்களைச் செய்தான். ஆனாலும் அவன் கூட சாத்தானின் சூழ்ச்சி வலையில் விழுந்து தேவனுக்குப் பிடிக்காத ஒரு காரியத்தைச்

செய்யும்படி சாத்தானால் வஞ்சிக்கப்பட்டான். (1 நாளா 21:1) இந்த அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பார்த்தால் தாவீது சாத்தானால் மோசம் போக்கப்பட்டதைக் குறித்து அறியலாம்; சாத்தானின் பொல்லாத ஆலோசனைகளை நம்பி மோசம் போனதால் அன்றையதினம் எழுபதினாயிரம் பேர் மடிந்து போனார்கள். (வசனம் 14) இன்றைக்கும் கூட கோடிக்கணக்கான பேர் சாத்தானின் இதமான - சூதான வார்த்தைகளை நம்பி மோசம் போகிறார்கள் என்பதை நாட்டின் நடப்புகளைக் கவனித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்கும்.

சாத்தான் காலமெல்லாம் மனித சத்துருவாக இருந்திருக்கிறான் என்பதற்கு இன்னும் ஒரு சான்று, யோபு 1:9-12; 2;4-8 ஆகிய வசனப் பகுதியில் தனது கொலை வெறிக்கு யோபுவை பலியாக்க தேவனிடத்தில் உத்தரவு பெற்றுக் கொள்ளுவதைப் பார்க்கிறோம். யோபுவையும் அவன் குடும்பத்தாரையும் மிகவும் கொடூரமாக அவன் சோதித்தும், தனது உத்தமத்தை விட்டு விலகாமல் யோபு தன் விசுவாசத்திலே உறுதியாய் இருந்து சாத்தானை வெட்கப்படுத்தினான்.

தேவகுமாரனாகிய இயேசுவைக் கூட அவன் விட்டு வைக்கவில்லை தேவனுடைய வார்த்தைகளை கொஞ்சம் திரித்து (குறைத்துக் கூட்டி) அவன் மோசம் செய்ய முயற்சித்தான். இது அவனுடைய போர்த் தந்திரங்களில் ஒன்று. இன்றும் கூட தேவ வார்த்தைகளோடு, கூட்டியும் குறைத்தும் போதித்து பல பிரிவுக் கூட்ட சபைகளைத் தோற்றுவித்து உண்மைக் கிறிஸ்தவத்தை மறைத்து விட எத்தனிக்கிறான். ஒரு நகரத்துக்குச் செல்ல பல வழிகள் இருப்பதைப் போன்று மெய்யான கடவுளிடம் செல்லுவதற்கு பல மார்க்கங்கள் இருப்பது தவறல்ல என்பது சாத்தான் மக்களிடையே பரப்பிவிட்டிருக்கிற சதித் திட்டம். அதே போல பல சபைக் கூட்டங்கள் தோன்றியிருப்பதும் அவனுடைய துர் ஆலோசனைதான். இயேசு ஸ்தாபிப்பேன் என்று கூறியதும் (மத் 16;18) ஸ்தாபித்ததும் (அப் 2:47) கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய சபையும் எபே 1:23 (எபே 4:4-6) ஒருமையில் இருப்பதைக் கவனியுங்கள். மேலும் தேவனை அடைவதற்கு நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறேன். என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவனிடத்தில் வரான் என்றும் கூறுகிறார். யோவான் 14:6 இவைகளிலிருந்து தேவனை அடைவதற்கு இயேசுவே வழி என்றும் அவருடைய மாசற்ற இரத்தத்தால் சம்பாதித்த சபை கிறிஸ்துவின் சபை ஒன்றுதான் என்றும் (அப் 20:28; ரோமர் 16;16) புலனாகிறது, பல மார்க்கங்கள், பல சபைப் பிரிவுகள் என்பதும் சாத்தானால் கற்பிக்கப்பட்ட பொய்க் கூற்று என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

கடைசியாக வானமும் பூமியும் ஒழிந்து போகும்; என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்கிறார் இயேசு. மத் 24;35. ஆனால்

சாத்தானின் வார்த்தைகள் ஒழிந்து போகும். ஒருவன் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு விசுவாசித்து மனந் திரும்பி அறிக்கையிட்டு ஞான ஸ்நானத்தில் கீழ்படிந்து மரண பரியந்தம் நிலைத்திருந்தால் அவன் ஆத்துமா அழியாது பரலோகம் செல்லும். ஒருவன் சாத்தானின் வார்த்தைக்குச் செவி கொடுத்து தேவ ஆலோசனைகளை மீறி நடந்தாலும், அசட்டை செய்தாலும் அவன் ஆத்துமா நரகம் சென்று அடையும். ஆகையால் நண்பனே, சகோதரியே நீங்கள் தேவனுடைய ஆலோசனைகளுக்குச் செவி மடுத்து தேவனிடத்துக்குக் கிட்டிச் சேருங்கள். அப்பொழுது நித்திய வாழ்வு பெறுவீர்கள். சாத்தானின் மோசம் போக்கும் வார்த்தைகளுக்கு இணங்கி நித்திய அழிவுக்குச் செல்லாதீர்கள்.

D. சாமுவேல்ராஜ்.

## யார் கர்த்தருக்குப் பிரியமாக ஆராதனை செய்யத் தகுதியுள்ளவர்?

1. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும் ஒருவன் பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்போது அத்தகுதியை பெறுகிறார் கலா 3:27
2. ஒருவன் சரீரமாகிய சபையில் இருக்கவேண்டும். கர்த்தர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்களை சபையில் சேர்த்துக் கொள்கிறார் அப் 2:47; 1 கொரி 12:18
3. ஒருவர் கிறிஸ்துவை பிரதான ஆசாரியராகவும், மத்தியஸ்தராகவும் அடைய வேண்டும். 1 தீமோ 2:5; எபி 13:15; யோவான் 14:6
4. ஒருவர் மகிமையின் ராஜாவைத் தொழுது கொள்ளுவதற்கு பரிசுத்த கரங்களை உடையவராக இருக்கவேண்டும். சங் 24:3,4, 1 தீமோ 2:8, சங் 26:6
5. ஒருவர் பரிசுத்த இதயமுடையவராக இருக்க வேண்டும். மற்றெல்லாக் காரியங்களுக்கும் இதுவே அடிப்படை. நீதி 4:23; மாற்கு 7:20-23
6. ஒருவர் தமது ஆராதனையில் செய்யப்படும் அனைத்துக் காரியங்களும் கர்த்தருடைய வசனத்துக்கு இசைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். யோவான் 4:23,24; 17:17; 8:32
7. ஒருவன் தன் சகோதரனுக்கு விரோதமான அனைத்தையும் மன்னித்து, பின்னரே கர்த்தரை தொழ முயலவேண்டும் மத் 5:23,24
8. ஒருவன் மரண பரியந்தம் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும் வெளி 2:10
9. ஒருவன் வெளிச்சத்தின் பிள்ளையாக இருக்க வேண்டும் அப்படி இருந்தால் தேவனோடும் மற்ற சகோதரர்களோடும் ஐக்கியம் வைத்துக்கொள்ளமுடியும். 1 யோவான் 1:7
10. ஒருவர் விசுவாசத்துடன் கர்த்தர் தம் வாக்குக் கொடுத்ததை ஏற்ற வேளையில் நிறைவேற்றுவார் என்று பொறுமையுடன் இருக்கவேண்டும் எபி 11:1; 1 பேதுரு 5:6

# இயேசுவின் சிலுவை மரணம்:
## பகைவர்களுடைய சூழ்ச்சியின் வெற்றியா?

இயேசுவின் மரணம் சாத்தானுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் மாபெரும் வெற்றி போல் தோன்றலாம். ஒருவேளை சாத்தானே கூட அப்படி நினைத்து அற்பகாலம் (மூன்றுநாட்கள்) மகிழ்ச்சியடைந்திருக்கலாம். அவர் சிலுவையில் தொங்க நேர்ந்தது பகைவர்களின் சூழ்ச்சியால் அல்ல; தேவனுடைய திட்டமும் விருப்பமுமே என்பதை பின்வரும் காரியங்களின் மூலம் அறியலாம்.

**1. பரமபிதாவின் விருப்பம் இயேசுவைச் சிலுவையில் தொங்க வைத்தது.**

இயேசு மூன்றுமுறை இரத்தமும், வியர்வையும் வெளிவரும் அளவுக்கு கண்ணீரோடும் ஏக்கப் பெருமூச்சுக்களோடும் இப்பாத்திரம் (மரணம்) தன்னை விட்டு நீங்கும்படி ஜெபித்தார் (மத் 26:36-44) தேவ ஆட்டுக்குட்டியானவர் இப்பாத்திரம் என்னை விட்டு நீங்கியே ஆகவேண்டும் என்று ஜெபிக்காமல் ''என்பிதாவே இந்தப் பாத்திரம் நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல; உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபித்தார். (வ. 39) தேவகுமாரன் தன் இஷ்டம் போல் காரியங்களைச் செய்ய நினைத்திருந்தால் ''பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை தன்னிடத்தில் அனுப்பும்படி வேண்டிக்கொண்டு (வ. 53) அவரை பலவந்தமாகப் பிடித்துக் கொண்டுபோக வந்த மக்கள் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர், மூப்பர்கள், ஆகியோரையும் தடுத்து நிறுத்த முடிந்திருக்கும். அப்படிச் செய்திருந்தாரானால் இவ்விதமாய் சம்பவிக்க வேண்டும் என்கிற வேத வாக்கியங்கள் எப்படி நிறைவேறும்? (வ. 54) என்கிறார். பழைய ஏற்பாட்டில் ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவின் பாடுகளைக் குறித்துச் சொல்லும் போது ''அவர் நெருக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயைத் திறக்கவில்லை. என்கிறார். ஏசாயா 53·7. ஏன் எனில் கர்த்தர் அவரை நொருக்கச் சித்தமாகி அவரை பாடுகளுக்குட் படுத்தினார். (வ. 10) மனுக்குலம் மீட்கப்படுவதற்கு அதைவிட வேறு வழி இல்லை. என்பதால் பிதாவின் விருப்பத்துக்குக் கீழ்ப்படிந்து மனுக்குலத்தின் பாவத்துக்காக மரிக்க தம்மை ஒப்புக்கொடுத்தார். மற்றபடி இது எதிரிகளின் சூழ்ச்சிக்குப் பலியான நிகழ்ச்சி அல்ல.

**2. மனுக்குலத்தின்மேல் தேவன் கொண்டிருந்த அளவற்ற அன்பு இயேசுவைச் சிலுவையில் தொங்க வைத்தது.**

''சிறிய வேதாகமம்'' என்ற புகழுக்குரிய வசனம் யோவான்

3-16. அதில் "இவ்விதமாய் அன்பு கூர்ந்தார்" என்ற சொற்றொடரால் தேவனுடைய அன்பின் ஆழத்தையும், உயரத்தையும், நீளத்தையும், அகலத்தையும் காணமுடிகிறது. இதைப் புரிந்து கொண்ட இயேசு தம்மைத்தாமே தாழ்த்தி சிலுவை மரண பரியந்தம் கீழ்ப்படிந்தார், (பிலி 2:8) யோவான் தனது முதலாம் நிருபத்தில் "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ் உலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம் இடத்தில் அன்பு கூர்ந்து நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது'' என்கிறார். 1 யோவான் 4:9, 10. ஆம்! மனுக் குலம் பாவத்திலிருந்து நீங்கி தேவனோடு ஒப்புரவாவதற்கு வசதியாகத் தான் இயேசு சிலுவையில் தொங்கினாரேயன்றி பகைவர்களின் சூழ்ச்சியினால் அல்ல.

## 3. தேவனுடைய அநாதித்தீர்மானமும், அவருடைய நித்திய திட்டமும் இயேசுவைச் சிலுவையில் தொங்க வைத்தது

எபே. 3 : 9 - 11 வரை உள்ள வசனம் குமாரன் மூலமாக மனுக் குலத்தை மீட்பது தேவனுடைய அநாதித் தீர்மானம் என்று போதிக்கிறது. அதே போன்று குமாரனும் அவருடைய நித்திய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பரலோகத்தின் மேன்மைகளை விட்டு விட்டு தேவனோடு மனிதனை ஒப்புரவாவதற்குத் தடையாக இருக்கும் பாவத்தை (ஏசாயா 59:2) தமது இரத்தத்தினாலே அகற்றுவதற்கு இவ்வுலகத்துக்கு வந்தார் என்று பிலி 2:5-8 வசனங்கள் கூறுகின்றன 1 யோவான் 2:2 கூட ''நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே, நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல; சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்'' என்கிறது. யோவான் 17:4 ல் ''பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன். நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் என்று இயேசு தன்னுடைய ஜெபத்தில் குறிப்பிடுகிறார். இவைகளெல்லாம் நமக்கு கூறுவது என்ன? இயேசுவைச் சிலுவையில் தொங்க வைத்தது தேவனுடைய நித்திய திட்டமேயன்றி பகைவர்களின் சூழ்ச்சி அல்ல.

## 4. இயேசுவுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த மகிழ்ச்சி அவரைச் சிலுவையில் தொங்க வைத்தது.

எபிரேய நிருப ஆசிரியர் "அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்

கிறார்'' என்கிறார் எபி 12:2. மனித குலத்தின் இரட்சகர் தாம் பட்ட பாடுகளுக்கப்பால் அவருக்காக வைக்கப்பட்டிருக்கிற சந்தோஷத்தைப் பார்த்தார். அதே மகிழ்ச்சியில் நம்மை தம்முடைய இரத்தத்தினாலே பிதாவோடு ஒப்புரவாக்கி உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். எபி 1:3; 1 பேது 3:22 அவர் நம்மை சிநேகிதர் என்று அழைத்து நம்நிமித்தம் தமது விலைமதியாத மாசற்ற இரத்தத்தைச் சிந்தி நம்மை மீட்பதற்கு விருப்பமுள்ளவராக இருந்தார். யோவான் 15:11-14 நாம் அவருடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்தால் நாம் பாவமன்னிப்புப் பெற்று பாவத்திலிருந்து விடுதலை அடைவோம் யோவான் 8:32.

நண்பனே, சகோதரியே, எதிரிகளின் சூழ்ச்சி வென்று விட்டதே என்று மனம் கலங்காதே. பிதாவினுடைய விருப்பமும், தேவன் மனுக்குலத்தின் மீது வைத்திருக்கும் அன்பும், தேவனுடைய நித்திய திட்டமும், பாடுகளுக்கு அப்பால் அவருக்காக வைக்கப்பட்டிருந்த மகிழ்ச்சியும் தான் உலக இரட்சகரைச் சிலுவையில் தொங்க வைத்தன. இந்த உண்மை உங்களுக்கு புரிகிறதா? (கலா 3:1) நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து விடுதலையடையும்படிக்கு தேவனுடைய ஆலோசனைகளுக்கு செவிமடுப்பீர்களா? நமக்காக ஜீவகிரீடம் ஆயத்தமாக இருக்கிறதே வெளி 2;10

ஹோவெல் பிக்காம்

## ஜெபம் - சில அடிப்படை உண்மைகள்

1. ஜெபம் நம்முடைய பரம பிதாவோடு நாம் தொடர்பு கொள்வதற்கு வகை செய்கிறது ஏசாயா 65:24. அதன் மூலமாக நாம் பரமபிதாவோடு பேசும் சிலாக்கியம் பெறுகிறோம்.
2. ஜெபத்தின் வழியாய் நம்முடைய தேவைகளுக்கேற்ற உதவியை பெறுகிறோம். எபி 4:16
3. ஜெபம் நம்முடைய விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்துவதற்கும் நன்றி சொல்லுவதற்கும் வகை செய்கிறது. பிலி 4;6. 7
4. பொதுவிடங்களில் ஜெபத்தின் மூலம் மற்றவர்களுக்கு பக்தி விருத்தியை உண்டாக்குகிறோம். 1 கொரி 14,14-17
5. ஜெபத்தினால் நம்முடைய சந்தோஷம் நிறைவாகிறது யோவான் 16:14
6. விசுவாசமுள்ள ஜெபமே கேட்கப்படும் யாக் 1;5-8
7. ஜெபம் தேவனை நோக்கிச் செய்யப்பட வேண்டும், மேரி மாதாவையோ, மற்ற பரிசுத்தவான்கள் என்று கூறப்படும் நபர்களையோ அல்ல. கொலோ 1:3-5; மத் 6:9
8. ஜெபம் நமக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தராயிருக்கிற இயேசுவின் மூலம் ஏறெடுக்கப்பட வேண்டும். 1 தீமோ 2;5; கொலோ 3:17; ரோமா 1:8.

# பேதுருவின் மாமியார்

பெயர் சொல்லப்படாத, ஆனல் மறக்க முடியாத மாது பேதுருவின் மாமியார். இதிலிருந்து பேதுரு திருமணமானவர் என்று தெரிகிறது. இதை பவுலும் உறுதி செய்கிருர். 1 கொரி 9:5.

போதகர்கள், தேவ ஊழியர்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று போதிக்கிற ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தினர் பேதுருவை முதல் "போப்" என்று கூறிக் கொள்கிருர்களே, அது எப்படி என்று கேட்காதீர்கள் அப்படிக் கேட்க ஆரம்பித்தால் நம் வாழ்நாள் முழுவதும் இப்படிப்பட்ட பல கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதிலேயே கழிந்து போகும்.

பேதுருவும் அவருடைய குடும்பமும் கலிலேயாக் கடற்கரையின் வடக்குக் கரையோரப் பகுதியில் உள்ள கப்பர் நகூமில் குடியிருந்தார்கள் என்று தோன்றுகிறது லூக் 4:31, 38. மீனவர்களில் பெரும்பாலோர் ஏழைகளாகவே இருப்பர். சுகாதாரக் குறைவு என்பது சர்வ சாதாரணம். எப்படியோ! அந்த அம்மாளுக்கு ஜுரம் வந்து விடுகிறது அதைப்பற்றிச் சொல்லும் போது "கடும் ஜுரம்" என்று வர்ணிக்கிறர் லூக்கா. அவர் வைத்தியராக இருந்தபடியால் சாதாரணக் காய்ச்சலுக்கும் கடும் ஜுரத்துக்கும் உள்ள வித்தியாசத்தைச் சுட்டுகிருர். லூக் 4:39

அச்சமயம் அந்தப் பகுதியில் ஊழியம் செய்து கொண்டிருந்த இயேசு தனது பணியை முடித்துக் கொண்டு பேதுருவின் வீட்டுக்கு வந்தார். எத்தனையோ பெரிய மனிதர்கள் அவருக்கு இடமளித்து உணவு கொடுக்க விருப்பமுடையவர்களாக இருந்திருக்கக் கூடும். ஆனல் ஒரு ஏழையின் குடிசையை இயேசு தெரிந்து கொண்டதின் மூலம் தாம் பூலோகத்து வந்த நோக்கத்தை எல்லா வகையிலும் செயல் படுத்திக் காட்டினர்.

அந்த அம்மாவின் உடல்நிலைக் குறைவு இக் குடும்பத்தாருக்கு மிகுந்த கவலையைக் கொடுத்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் வீட்டுக்குள் பிரவேசித்தவுடன் அவரை வரவேற்று உபசரிப்பதற்குப் பதிலாக அந்த அம்மாளின் உடல்நலக் குறைவைப் பிரஸ்தாபித்து, சுகம் அளிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிருர்கள்.

அங்கே அவர் "குனிந்து நின்று" என்ற சொற்றொடர் பேதுருவின் இல்லம் ஒரு தாழ்வான குடிசையாக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

இயேசு அந்த அம்மாவை சுகப்படுத்தினர். உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள் என்று வசனம்

கூறுகிறது. 4:39 இதிலிருந்து நமக்கு இரண்டு காரியங்கள் தெளிவாக இருக்கின்றன 1) உடனடி சுகம் 2) இந்த அம்மாளின் நன்றியுணர்வும் தொண்டுள்ளமும்.

இந்த நேரத்தில் தற்காலத்தில் தெய்வீக சுகம் கொடுக்கும் வரம் பெற்றவர் என்று கூறித் திரியும் சில நபர்கள் நம்முடைய நினைவுக்கு வருகிறார்கள். நோயாளிகளுக்கு விசுவாசம் வேண்டும் என்பர்; உபவாசமிருந்து பல மண்டலங்கள் (நாட்கள்) ஜெபிக்கவேண்டும் என்பர்; காணிக்கை என்ற பெயரில் கையூட்டு எதிர்பார்ப்பர்; மெது மெதுவாகத் தான் சுகம் ஆகும் என்பர்; உடுக்கை அடிப்பர்; உடம்பை அலட்டிக் கொள்வர். ஆனால் இங்கே அவைகள் ஒன்றையும் நாம் காணவில்லை. அது மட்டும் இல்லை; அந்த அம்மாள் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்யும் அளவுக்கு தெம்பும் உற்சாகமும் அடைந்தார். இயல்பாக உள்ள மருத்துவ முறைகளுக்கும் தெய்வீக சுகத்துக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாக இருக்கிறதைக் கவனியுங்கள். இரண்டாவது, அந்த அம்மாளின் நன்றியுணர்வும் தொண்டுள்ளமும். இது எல்லாக் கிறிஸ்தவக் குடும்பங்களிலும், மக்களிடத்திலும் இருக்க வேண்டிய சிறந்த பண்பு. ஆண்டவர் நமக்குக் கொடுக்கும் சுகமும் செல்வமும், வீடும், ஆஸ்தியும் மற்றவர்களுக்கு குறிப்பாக விசுவாச மார்க்கத்தாருக்குத் தொண்டுசெய்வதற்குத் தான் கலா 6:10

**இந்த நிகழ்ச்சியின் மூலம் நாம் கற்றுக்கொள்ளுகிற பாடம்**

1. நாம் ஏழைகளாக இருக்கலாம், நம்முடைய குடியிருப்பு குடிசையாகக்கூட இருக்கலாம். ஆண்டவருக்கு அதெல்லாம் பிரச்னையில்லை இவரை அன்புடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய உள்ளமுள்ளவர்களாக இருக்க வேண்டும்

2. கிறிஸ்தவக் குடும்பங்கள் விருந்தோம்பலில் முன் மாதிரியாக இருக்கவேண்டும் ரோமர் 12:13

3. நம்முடைய குடும்பங்களில் நம்முடைய கணவன்/மனைவிமார்களின் உறவினரைக் கூட நேசித்துப் பராமரிக்க வேண்டும் ரோமர் 12:18 சகோதரிகள் "ரூத்"தை நினைத்துக்கொள்ளுங்கள்.

4. திருமணம் ஊழியத்துக்குத் தடை என்ற கூற்று மனிதனுடைய போதனை 1 தீமோ 4:2 "வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணிக் கொள்வது நலம்" என்பது தேவ ஆலோசனை 1 கொரி 7:9

5. பேதுருவின் குடும்பத்தாரைப் போல் நம்முடைய பிரச்னைகளைக் கர்த்தரிடம் முறையிடுவோம் லூக் 4:38 அவர் நம்மை ஆதரிப்பார் சங் 55:22

# கர்த்தருடைய பந்தி – ஆசரிப்பு முறை

கர்த்தருடைய பந்தி என்று சொல்லும் போதே இது கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட தெய்வீக நியமம் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். அது அவருடைய சரீர மரணத்துக்கு சற்று முன்பு பஸ்கா பண்டிகையை ஆசரித்த போழ்து தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்ததாகும் மத் 26:17-29, மாற்கு 14:22-25 லூக் 22:7-20; 1 கொரி 11:20-24

இது உலகம் உள்ளளவும் நீடித்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கொடுக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கும் போது, இதை எவ்வெப்பொழுது எப்படி ஆசரிக்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லாமல் விட்டிருப்பார் என்று சிலர் சொல்லுகிற வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட எதுவும் தெளிவில்லாமல் சொல்லப்படவில்லை.

பழைய ஏற்பாட்டில் தேவனால் ஏற்படுத்தப்பட்ட பண்டிகைகளைக் கவனித்துப் பாருங்கள்,

**ஓய்வு நாள் ஆசரிப்பு:** யாத் 20:10 "ஏழாம் நாளோ உன் கர்த்தருடைய ஓய்வு நாள்," ஏழாம் நாளாகிய ஓய்வுநாள் இஸ்ரவேலருடைய காலம் முழுவதும் அல்லது சிலுவை வரையிலும் கண்டிப்பான முறையில் ஆசரிக்கப்பட வேண்டும் கொலோ 2;16.

**2. பஸ்கா பண்டிகை;** யாத் 12;17, 18 "புளிப்பில்லாத அப்பப் பண்டிகையை ஆசரிப்பீர்களாக"... முதலாம் மாதமாகிய நிசான் மாதம் பதினான்காம் தேதி மாலையில் தொடங்கி இருபத்தோராம் தேதி மாலை வரையில் தவறுவல் ஆசரிக்கப்பட வேண்டும்.

**3. பெந்தே கோஸ்தே பண்டிகை;** பழைய ஏற்பாட்டில் (1) இது வாரங்களின் பண்டிகை யாத் 34 : 22; உபா 16: 10, 16; 2 நாளா 8:13. ஏனெனில் பஸ்கா பண்டிகை முடிந்து ஏழு முழுமையான வாரங்கள் அல்லது ஐம்பது நாட்களுக்குக் கொண்டாடப்படுகிறது. லேவி 23 : 15, 16. மூலமொழியாகிய கிரேக்க மொழியில் பெந்தே கோஸ்தே என்றால் ஐம்பது என்று பொருள் (2) அறுப்பின் பண்டிகை யாத் 23:16 ஏனெனில் பின் அறுப்பின் முடிவை அது குறிக்கிறது. (3) முதற்கனி சேர்க்கும் நாள். எண் 28:26 ஏனெனில் புதிய தானியத்தினால் செய்யப்பட்ட போஜனத்தை பலிபீடத்தில் படைக்கிறார்கள் லேவி 23;17 ஆசரிக்க வேண்டிய நாள் ஏழு ஓய்வு நாட்கள் முடிந்து வருகிற வாரத்தின் முதலாம் நாள் லேவி 23:11. 15. 16. அல்லது உபா 16:9ல் கூறப்பட்டுள்ளபடி அறுப்பு அறுக்கத் தொடங்கும் நாள் முதல் ஏழு வாரங்கள்.

**4. பாவ நிவாரண நாள்** லேவி 16:1-34; எண் 29:7-11 இந்த வசனங்களின்படி ஏழாம் மாதமாகிய திஸ்ரி (அக்டோபர்) மாதம்

10-ம் நாள் அல்லது கூடாரப் பண்டிகைக்கு ஐந்து நாட்கள் முந்தி பாவ நிவாரண நாள் அனுஷ்டிக்கப்பட்டது என்று கூறுகிறது.

**5. கூடாரப் பண்டிகை** உபா 16:13; லேவி 23;27; எசே 45-25 இந்தப் பண்டிகை ஏழாம் மாதமாகிய திஸ்ரி மாதம் 15-ம் நாள் அதாவது பாவ நிவாரண நாளுக்கு ஐந்து நாள் முந்தித் தொடங்கும் நெகே 8-18. இன்னும் ஒரு பண்டிகை சேர்க்கப்பட்டு ஓய்வு நாள் ஆசரிப் போடு இணைக்கப்பட்டுள்ளது.

**பூரிம் பண்டிகை** எஸ் 9:26-31 ஆசரிக்க வேண்டிய காலம். ஆண்டு தோறும் ஆதார் மாதம் (ஆறாவது மாதம்) பதினான்காம் பதினைந்தாம் தேதிகளில் மொர்தெகாய் நியமித்த இரண்டு நாட்களில் அது அனுஷ்டிக்கப்பட்டது. எஸ் 9:17-24

7 **தேவாலயப் பிரதிஷ்டைப் பண்டிகை** யோவான் 10:22 இது பலிபீடப் பிரதிஷ்டை என்று மக்கபேயர் காலத்திலும், விளக்குகளின் பண்டிகை என்று யூத வரலாற்று ஆசிரியர் ஜோசப்பஸ் காலத்திலும் அழைக்கப்பட்டது. ஆசரிக்க வேண்டிய நாள்; பனிரண்டாம் மாதமாகிய கிஸ்லு மாதம் இருபத்தி ஐந்தாம் நாளில் தொடங்கும். நமது கர்த்தராகிய இயேசுவும் கூட இந்தப் பண்டிகையில் கலந்து கொண்டார் என்று தோன்றுகிறது. இந்தப் பண்டிகைகளில் யூத சமுதாயத்து ஆண்கள் யாவரும் வருஷத்துக்கு மூன்று முறையாவது கலந்து கொள்ள எருசலேமுக்கு வரவேண்டும், என்ற நியமம் உண்டு. அப்பண்டிகைகள் (1) பஸ்கா (2) பெந்தேகோஸ்தே (3) கூடாரப் பண்டிகை யாத் 23:14-17

**சில சிந்தனைகள் :** இஸ்ரவேல் மக்கள் அனுஷ்டித்த மேலே கூறிய ஏழு பழைய ஏற்பாட்டுப் பண்டிகைகளிலும், இன்னின்ன காலம், இத்தனை நாட்கள், இப்படி இப்படி அனுஷ்டிக்கப் பட வேண்டும் என்று தெளிவாகக் குறிக்கப்படிருந்ததைக் கவனித்தீர்களா? அவைகளைக் கர்த்தர் நியமித்த நாட்களிலும், காலங்களிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும். அதை மீறுவது கர்த்தருடைய சித்தத்துக்கு விரோதமாகும்.

காலத்தால் அழிந்து போகிற பழைய ஏற்பாட்டுப் பண்டிகைகள் விஷயத்திலேயே தேவன் அவைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டிய காலங்களையும் நாட்களையும் தெளிவாகக் கூறியிருக்கிறார் என்றால் நித்தியம் வரைக்கும் நிலைத்திருக்கிற தெய்வீகப் புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்களில் ஒன்றான கர்த்தருடைய பந்தியை எப்படியோ அவரவர்களுக்குத் தோன்றினபடி அனுஷ்டித்துக் கொள்ளுங்கள் என்று விட்டு விடுவாரா? இவ்வளவு முக்கியம் வாய்ந்த தொன்றைக் குறித்து அது எப்போது அனுஷ்டிக்கப்பட வேண்டும். எந்த காலத்தில் உட்கொள்ள வேண்டும். என்பன போன்ற விஷயங்களைப் பற்றி மௌனமாக இருந்து தம்முடைய சீஷர்கள் இது விஷயத்தில் குழப்பமடைய

அனுமதிப்பாரா? மற்ற எல்லாக் காரியங்களையும் குறித்து தெளிவாகச் சொன்னவர் கர்த்தருடைய பந்தியைப் பற்றிய விஷயத்தில் மட்டும் தெளிவில்லாமல் சொல்லியிருக்க மாட்டார். ஆகவே அதை நாம் சிந்தித்துப் பார்த்து செயல்பட வேண்டும். சாத்தான் தேவனுடைய திட்டத்தைக் குலைக்கும் பணியை அயராது செய்து கொண்டிருக்கிறான். அதனால் தான் இந்த விஷயத்திலும் மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறான். வஞ்சிக்கப்பட்டுவிடாமல் உஷாராக இருங்கள்.

கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகிற பலரும் இதைப் பற்றி என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

பிரான்ஸிஸ் B. கேஸில்லி என்பவர் கத்தோலிக்க சமயத்தில் முன்னணியில் உள்ள சமயவாதிகளில் ஒருவர். அவர் Religion: Doctrine and Practtce என்ற நூலின் 230-ம் பக்கத்தில் கீழ்க்கண்ட வாறு எழுதுகிறார். "கத்தோலிக்கத் திருச்சபை கர்த்தரால் கொடுக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றும் வகையில் ஈஸ்டர் பண்டிகை நாளில் கர்த்தரோடு ஐக்கியமாவதற்கு இதை அனுஷ்டிக்கிறது. இதற்கு 'பாஸ்கா ஐக்கியம்' என்றும் பெயர் உண்டு. எனினும் ஆர்வமுள்ள சபையார் தேவைப்பட்டால் வருஷத்தில் இன்னும் சில சமயங்களில் கூட அனுஷ்டித்துக் கொள்ளலாம். மாதம் ஒரு முறை வழக்கமாகவும் இன்னும் அதி தீவிரவாதிகள் வாரம் தோறும் மட்டுமல்ல தினம் தினம் கூட அனுஷ்டித்துக் கொள்ளலாம் ஆனால் ஒன்று இதை அடிக்கடி அனுஷ்டிப்பவர்கள் சரியான நோக்கத்துக்காக அதை அனுஷ்டிக்க வேண்டும். மற்றவர்கள் செய்கிறார்கள் என்று ஒரு சடங்காகச் செய்யக் கூடாது என்கிறார். இதை சார்லஸ் ஆல்பிரெட் மார்ட்டின் என்ற மற்றொரு குருவும் ஆமோதிக்கிறார்.

அதே போன்று சீர்திருத்த சபையைச் சேர்ந்த எண்ணற்ற பிரிவுக் கூட்டத்தாரும் இது விஷயத்தில் மனத் தெளிவுடன் இருக்கிறார்களாக என்பது சந்தேகமே எவ்வெப்போது கர்த்தருடைய பந்தி அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு பாப்திஸ்து சபையாரின் பதில்: அதைப் பற்றிக் கட்டளை யேதும் இல்லை "நீங்கள் இதைப் புசிக்கும் போதெல்லாம்" என்று தான் வேதம் சொல்லுகிறதேயன்றி இன்னின்னபடி இன்னின்ன நாளில் அனுஷ்டிக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்பர். மார்மன்ஸ் என்னும் கூட்டத்தார். அப்பம் தண்ணீர் மட்டும் போதும் என்பர் எகோவாவின் சாட்சிகள் என்பவர்கள், ஆண்டுக்கு ஒரு முறை என்பர், ஏழாம் நாள் சபையார் மூன்று மாதத்துக்கு ஒரு முறை என்பர். சி. எஸ். ஐ. சபையார் முதல் ஞாயிறு மற்றும் விசேஷித்த சமயங்களில் என்பர்.

ஆக, கத்தோலிக்கரும் சரி, ஏனைய கூட்டத்தவரும் சரி, கர்த்தருடைய பந்தி விஷயத்தில் ஒரு உறுதியான உபதேசமின்றி நிலையில்லாமல் தங்களுக்குத் தோன்றினபடி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதைப்பற்றி ஆதித் திருச்சபையின் தூண்களாகக் கருதப்படும் பிலினி ஜஸ்டின் மார்ட்ரைர், தெர்த்துல்லியன் போன்ற வேத அறிஞர்கள் ஆதி திருச்சபை "கர்த்தருடைய பந்தியை வாரந்தோறும் அனுஷ்டித்து வந்தார்கள் என்று சாட்சி பகருகின்றனர். எல்லாப் பழஞ் சுவடிகளும் முதல் மூன்று நூற்றாண்டுகளில் கர்த்தருடைய பந்தியை எல்லாச் சபைகளுமே ஞாயிறு தோறும் அனுஷ்டித்து வந்தார்கள். டாக்டர் மேசன் என்னும் பிரஸ்பிடேரியன் சபையைச் சேர்ந்த வேத அறிஞர் இன்னும் ஒருபடி மேலே சென்று '' ஏழாவது நூற்றாண்டு வரை கிரேக்க சபைகளில் கர்த்தருடைய பந்தி வாரந்தோறும் அனுஷ்டிக்கப் பட்டு வந்தது என்றும் தொடர்ந்து மூன்று கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளாதவர்கள் சபையிலிருந்து நீக்கப்பட்டனர் என்றும் கூறியுள்ளதை திரு ஃபுல்லர் என்னும் வேத அறிஞர் ஆமோதித்திருக் கிறார். ஃபுல்லர் மட்டுமல்ல! இதைப்பற்றி எவர் மெய் மனதோடு ஆய்வு செய்தாலும் இவ்உண்மையை ஆமோதிப்பர்,

திரு. ஜான் வெஸ்லி என்பவர் தமது Letter to America 1784 என்ற நூலில் ''சபை மூப்பர்களுக்கு கர்த்தருடைய பந்தியை ஞாயிறு தோறும் அனுஷ்டிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். ஜான்கேல்வின், ஞாயிறு தோறும் விசுவாசிகள் ஒன்று கூடி ஆவிக்குரிய ஆகாரத்தை உண்டு அதன் மூலம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களைப் பெற்று கொள்ள வேண்டும் என்கிறார்.

Adduigton Bible Commentary என்னும் நூலை இயற்றிய ஜான் ப்ரௌன், குறைந்த பட்சம் முதல் மூன்று நூற்றாண்டு வரையிலாவது கர்த்தருடைய பந்தி வாரந்தோறும் நடைபெற்றதற்கு வலிமையான ஆதாரம் இருக்கிறது என்கிறார். இப்படிப் பல வேத அறிஞர்கள் கர்த்தருடைய பந்தி ஞாயிறு தோறும் அனுஷ்டிக்கப் பட்டதற்கு சாட்சி பகர்ந்தும், தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட்டு வர வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றனர். இருந்த போதிலும் இவர்கள் எல்லாம் மனிதர்கள் இவர்களுடைய அபிப்பிராயங்களை நாம் ஓரளவுக்குத் தான் எடுத்துக் கொள்ள முடியும்.

இதைப்பற்றி பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டுப் பேசிய புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களின் உபதேசம் என்ன என்பதைக் கூட பார்ப்போம். கர்த்தருடைய பந்தி கடவுளுடைய இராஜ்ஜியத்துக்குரிய ஒரு காரியம். அப்படி இருக்கும் போது அது எவ்வெப்பொழுது எவ்வாறு அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படவில்லை என்பது அபத்தம். முந்தியே நாம் தேவனுல் உண்டாக்கப்பட்ட பரிசுத்த நாட்களும், பண்டிகைகளும் எப்படி ஆசரிக்கப்பட வேண்டும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார் என்று பார்த்தோம். அப்படியிருக்க கர்த்தருடைய பந்தி விஷயத்திலும் அப்படியே சொல்லியிருப்பார் என்று நம்பாமல் இருப்பது எப்படி?

முதலாவது அப் 20:7 சொல்லுகிறதை கவனிப்போம் "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில் நடுராத்திரி மட்டும் பவுல் பிரசங்கித்தான்" என்று கூறுகிறது. அப்பம் பிட்கும்படி என்பது ஆராதனையில் செய்யப்பட வேண்டிய மற்றெல்லா அம்சங்களாகிய பிரசங்கம், பாடல், கொடுத்தல் கர்த்தருடைய பந்தி மற்றும் ஜெபம் ஆகிய அனைத்தையும் குறிக்கும் (அப் 2:42) இதை எல்லாத் தரப்பினரும் ஒத்துக் கொள்கின்றனர்.

மேலும் கர்த்தர் தமது சீஷர்களைக் கர்த்தருடைய பந்தியை அனுசரிக்க வேண்டும். என்று கட்டளையிட்டிருக்கிறபடியால் அது ஏதாவது ஒரு காலகட்டத்தில் (பழைய ஏற்பாட்டில் உள்ளது போல்) அனுஷ்டிக்க பட வேண்டும் என்று ஆகிறது, அவர்கள் அதை ஆண்டுக்கொருமுறை அனுஷ்டித்திருப்பார்கள் என்றால் ஆண்டின் எந்தக் குறிப்பிட்ட மாதம் குறிப்பிட்ட தேதியில் அனுசரித்தார்கள் என்று வேதாகமத்தில் குறிப்பு இருக்க வேண்டும். ஆனால் அப்படியொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. (பழைய ஏற்பாட்டுப் பண்டிகைகள் விஷயத்தில் அப்படி இருப்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம்.) சிலர் கருதுவது போல் இது மாதம் ஒருமுறை அனுஷ்டிக்கப்பட வேண்டியது என்றால் மாதத்தில் எத்தனையாவது நாளில் என்று குறிப்பு இருக்க வேண்டும். ஆனால் அப்படி ஒரு குறிப்பும் கிடையாது. வாரம் ஒரு முறை அனுஷ்டித்தார்கள் என்றால் எந்த நாளில் அனுஷ்டித்தார்கள் என்று இருக்க வேண்டும். அது தெளிவாக வாரத்தின் முதலாம் நாள் என்று இருக்கிறது. அதிலிருந்து வாரம் ஒருமுறை முதலாம் நாளில் கர்த்தருடைய பந்தியை அனுஷ்டிக்க வேண்டும் என்பது தெய்வீக ஏற்பாடு என்று விளங்குகிறது. பின் ஏன் இந்தக் குழப்பம்?

அப் 20:7 என்ற ஒரே வசனத்தை வைத்துக் கொண்டு நாம் இதைத் தீர்மானிக்கவில்லை புதிய ஏற்பாட்டில் நிறைய இடங்களில் கர்த்தருடைய பந்தியைப் பற்றியும், அது அனுஷ்டிக்கப்பட வேண்டிய முறைகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இதோ அவைகளில் சில.

1) கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியை அனுஷ்டிக்க வேண்டும் என்ற கட்டளை உண்டு (மத் 26-26-28; 1கொரி 11:17-29, 33,34)
2) அவர்கள் ஒரு இடத்தில் கூடி வர வேண்டும் என்ற கட்டளை உண்டு (எபி 10:25)
3) அவர்கள் கூடி வந்து கர்த்தருடைய பந்தியை அனுஷ்டித்தார்கள் (கொரி 11:17-21, 28, 33)
4) அவர்கள் கர்த்தருடைய பந்தியை அனுஷ்டிப்பதற்காகக் கூடி வந்தார்கள். (கொரி 11:20,33)
5) அவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி வந்தார்கள் (கொரி 16:1,2)

6) அப்போஸ்தலன் பவுலுடைய கட்டளை—கர்த்தருடைய கட்டளை (1கொரி 14:37) (அவர் சுயமாய்ப் பேசவில்லை, பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டே பேசுகிறார் 2பேது 1:21)

7) ஆகையால் அப் 20:7ல் கூடிய சபை கர்த்தருடைய கட்டளைக்கிசைவாகக் கூட்டப் பட்ட கூட்டம்

8) மேற்கூறிய வசன ஆதாரங்கள் சரியில்லையென்று சொல்வோமானால் வாரத்தின் முதலாம் நாளில் கூடி கர்த்தருடைய பந்தி அனுஷ்டிப்பது தேவையில்லாத வேலை. கட்டளையை நிறைவேற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்வதில் பொருள் இல்லை. ஆகையால் அப்படி அனுஷ்டிக்காதவர்கள் மீதும் எவ்விதக் குற்றமும் சுமராது என்று பொருள்படும். எத்தனையோ காரியங்களில் "சிண்டு பிடி"ச் சண்டை போடுகிற கிறிஸ்தவ உலகம், கட்டளையே யில்லாத கர்த்தருடைய பந்தியை வாரத்துக்கு ஒரு முறை என்று சிலரும், மாதத்துக்கு ஒரு முறை என்று வேறு சிலரும், ஆண்டுக்கொரு முறை தான் என்று மற்றவர்களும் செய்வது எதைக் காட்டுகிறது? கட்டளை உண்டு ஆனால் சத்துருவாகிய சாத்தான் நம்முடைய கண்களைக் குருடாக்கி (2கொரி 4:4) தெளிவாக அதைப் பார்க்கக் கூடாமல் செய்து கொண்டிருக்கிறான் என்று தெரிகிறது ஆகவே சகோதரர்களே, பொறுமையாக சத்திய வசனத்தைப் படித்துப் பார்த்து காரியங்களைப், புரிந்து கொள்ளப் பிரயாசப்படுங்கள்.

இந்த சமயத்தில் G K வாலஸ் என்ற வேத அறிஞர் சொன்னது தான் ஞாபகம் வருகிறது. நினைவுச் சின்னம் ஒன்றைத் திறப்பதற்கான ஏற்பாடு செய்து அறிவிக்கப் பட்டாயிற்று. அதற்கு மந்திரி ஒருவர் வரவழைக்கப்பட்டார். மக்கள் திரண்டு வந்திருந்தனர். பாண்டு வாத்தியம் முழங்கிற்று நினைவுச் சின்னத்துக்குரியவரை மந்திரி வெகுவாய்ப் புகழ்ந்து பாராட்டிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இனிப்பு வழங்கப்பட்டது. நிகழ்ச்சி முடிந்ததற்கடையாளமாக தேசீய கீதம் பாடப்பட்டது மக்களும் கலைந்து சென்றுவிட்டனர். நினைவுச்சின்னம் திறக்கப்படவேயில்லை. எதற்காக மக்கள் கூட்டினார்களோ அந்தக் காரியம் நடக்காமலே நிகழ்ச்சி முடிவுற்றது.

அதைப் போன்று தான் அநேக கிறிஸ்தவக் கூட்டங்கள் ஞாயிறு தோறும் சபையாகக் கூடி பாடுகிறார்கள், ஜெபிக்கிறார்கள், காணிக்கை செலுத்துகிறார்கள் பிரசங்கம் பண்ணுகிறார்கள் ஆனால் சபை கூடி வருவதின் பிரதான நோக்கத்தை—" அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்தார்கள்" (அப் 20:7) நிறைவேற்றாமலே பிரிந்து சென்று வருகின்றனர் நினைவுச் சின்னத்தைத் திறந்து வைக்காமலே கலைந்து சென்ற மக்கள் கூட்டத்துக்கும் கர்த்தருடைய பந்தியை அனுஷ்டிக்காமலே பிரிந்து செல்லுகிற சபைக் கூட்டத்தத்துக்கும் என்ன வித்தியாயம்?

கிறிஸ்தவ அன்பர்களே! சிந்திப்பீர்! இப்படிப்பல காரியங்களில் நம்மை மோசபோக்கும் சத்தானிடம் உஷாராயிருங்கள்

புரூஸ் R. கார்டு

# கல்வாரியிலிருந்து கன்மலைவரை

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட வெள்ளி மாலையில், அடுத்து ஓய்வு நாள் வருகிறபடியால் அரிமத்தியா ஊர் யோசேப்பு, சிலுவையினிடத்திற்கு விரைந்து சென்றார். மரித்துப்போன இயேசுவின் சடலத்தை அடக்கம் செய்வதற்குரிய உத்தரவை பிலாத்துவிடமிருந்து பெற்றிருந்தார் நிக்கோதேமு என்ற நியாயசாஸ்திரியின் உதவியோடு சடலத்தை கீழேஇறக்கி, குளிப்பாட்டி, நிக்கோதேமு வாங்கிக்கொடுத்த வாசனைத் திரவியங்களைப் போட்டு, மெல்லிய துணியினால் சடலத்தைப் போர்த்தி தனக்காக புதிதாக வெட்டப்பட்டிருந்த கல்லறைக்குள் வைத்தான் சூரியன் அஸ்தமித்து யாதொரு வேலையும் செய்யக்கூடாத ஓய்வு நாள் ஆரம்பிப்பதற்கு சிறிது நேரமே இருந்தபடியால், சரியான முறையில் வாசனைத்திரவியங்கள் போட்டு நல்லமுறையில் பதப்படுத்தக் கூட நேரமில்லை.

இவைகளை மகதலேனாமரியாளும் யோசேயின், தாயாரான மரியாளும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். நேரக்குறைவால் யோசேப்பும், நிக்கோதேமும் அவசர அவசரமாக தங்கள் பணியை முடித்துவிட்டு மலைச்சரிவில் ஒரு பாறையில் குடையப்பட்டிருந்த அந்தக் கல்லறையின் முகப்பில் ஒரு பெரிய பாராங்கல்லை உருட்டி கொண்டு வந்து வைத்துவிட்டு வீடு திரும்பினார்.

**ஓய்வு நாள் முடிந்தது:**

சனி மாலை ஓய்வு நாள் முடிந்த பின்னர் மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமியும், மற்றவர்களும் இயேசுவின் சடலத்துக்குப் பூசலாம் என்ற எண்ணத்துடன் வாசனைத் திரவியங்களை வாங்கிக் கொண்டு ஞாயிறு காலையில் சூரியன் உதிப்பதற்கு முன் கல்லறைக்கு வந்தார்கள். அவர்கள் வழியிலேயே கல்லறையின் வாயிலில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பாராங்கல்லை யார் நமக்காக புரட்டித் தள்ளுவார் என்று பேசிக்கொண்டு வந்தனர். அதற்கு முந்தியே அதிகாலை வேலையில் பூமிஅதிர்ச்சி ஏற்பட்டு வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து அந்தக்கல்லைப் புரட்டித் தள்ளினான் என்ற உண்மை அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது.

மகதலேனாமரியாள் தான் முதன்முதலில் கல்லறையண்டைக்கு வந்தாள். ஒரு வேளை அவள் இளம்பெண்ணாகஇருந்ததால் மற்றவர்களைக் காட்டிலும் வேகமாக ஓட முடிந்திருக்கும். அவளிடத்திலிருந்து ஆண்டவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்ததால் அவள் கர்த்தரை மிக வும் அதிகமாய் நேசித்திருந்தாள்.

### சரீரத்தைக் காணோம்

அவள் கல்லறையண்டைக்கு வந்தபொழுது இன்னும் சரியாக விடியக்கூட இல்லை. லேசான இருட்டு இருந்தது. கல்லறை காலியாகவும் இயேசுவின் சரீரம் அங்கே இல்லை என்பதையும் பார்த்தபொழுது அவள் மிகவும் வியாகுலப்பட்டாள். என்னசெய்வது என்று தெரியாமல் பேதுரு, யோவானிடத்திற்கு ஓடிப்போய் கர்த்தரை யாரோ கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், எங்கே வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை என்று புலம்பினாள்.

### அவர் உயிர்த்தெழுந்தார்.

இதற்குள்ளாக பொழுது புலர்ந்து மற்ற பெண்களும் கல்லறையண்டைக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களும் கல்லறை திறந்திருந்ததைக் கண்டு உள்ளே பார்த்தார்கள். சரீரம் அங்கே இல்லை. எதிர் பாராத இச்சம்பவத்தைக் குறித்து கலக்கமடைந்து திகைத்து நிற்கும் வேளையில் பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்த இரண்டு பேர் அவர்கள் முன்னாலே நின்று, உயிரோடிருக்கிறவரை, மரித்தோரிடத்தில் தேடுவதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டும் என்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவு கூருங்கள் என்றார்கள் லூக் 24:5-7, அப்பொழுது அந்தப் பெண்கள் அவருடைய வார்த்தையை நினைவு கூர்ந்து கல்லறையை விட்டுத் திரும்பிப் போய் இந்தச் சங்கதிகள் எல்லாவற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள்.

இந்த பெண்கள் போனபிறகு, பேதுருவும், யோவானும் மகதலேனா மரியாள் சொன்ன காரியங்கள் மெய்தானோவென்று அறிய கல்லறைக்கு ஓட்டமாய் ஓடினார்கள். யோவான் இளைஞனாயிருந்தபடியால் பேதுருவை விட முந்தி ஓடி கல்லறையண்டைக்கு வந்து வாயிற்படியிலேயே நின்று கல்லறைக்குள் எட்டிப்பார்த்தான். பின்னர் வந்த பேதுருவோ நேரடியாகக் கல்லறைக்குள் நுழைந்து, குனிந்து பார்க்கையில் சடலத்தைச் சுற்றியிருந்த துணியும் முகத்தை மூடியிருந்த துணியும் தனித்தனியே ஒழுங்காகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டான். மயக்கம் தெளிந்து அவரே எழுந்து தப்பித்தேன், பிழைத்தேன் என்று ஓடி விட்டார் என்ற கூற்றுக்கும், யாரோ அவரை அவசர அவசரமாக திருடிக் கொண்டு போய் விட்டார்கள் என்ற கூற்றுக்கும் இந்தச் சூழ்நிலை பொருந்தவில்லை என்பதைக் கவனியுங்கள். யோவானும் உள் நுழைந்து இவைகளைப் பார்த்து இயேசு உயிர்த்தெழுதலைப் பற்றி பேசின வேத வாக்கியங்களை நினைவு கூர்ந்தான்.

### இயேசு மரியாளுக்கு தரிசனம் கொடுத்தார் :-

மகதலேனா மரியாளும், பேதுருவையும் யோவானையும் தொடர்ந்து கல்லறைக்குள் வந்தாள். அவள் துக்கத்தோடு தனிமையில்

அழுது புலம்பிக் கொண்டு கல்லறைக்குள் மீண்டும் பார்த்தாள். இப்பொழுது இரண்டு தேவ தூதர்கள் இயேசுவின் சடலம் வைத்திருந்த நிலையில் தலைமாட்டிலும், கால் மாட்டிலும் உட்கார்ந்திருக்கக் கண்டாள். பெண்ணே! நீ ஏன் அழுகிறாய்? என்று கேட்டார்கள். அதற்கு அவள்: யாரோ என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை" என்றாள். இப்படிச் சொல்லிக் கொண்டே பின்னாலே திரும்பிப் பார்த்த பொழுது ஒரு ஆள் நின்று கொண்டு அவளைப் பார்த்து; பெண்ணே! ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்? என்று கேட்டான். அவன் ஒருவேளை கல்லறைத் தோட்டக்காவலாளி என்றும், இயேசுவின் சடலத்தைக் கண்டுபிடிக்க அவன் உதவக் கூடும் என்று எண்ணி, ஐயா, நீர் அவரை எடுத்துக் கொண்டு போயிருந்தால் அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும். நான் போய் அவரை எடுத்துக் கொள்வேன் என்றாள். அந்த மனிதன் மரியாளே என்று பேர் சொல்லி அழைத்தார். அது அவருக்குப் பழக்கமான குரலாயிருக்கவே ரபூனி என்று அவளை அறியாமலேயே அவள் வாய் முணு முணுத்தது. (ரபூனி என்றால் ஆண்டவரே என்று பொருள்.) அவரை ஆலிங்கனம் செய்ய முயற்சித்தாள்.

இயேசு அவளை நோக்கி, என்னைத் தொடாதே! நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய் நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகவில்லை என்று அவர்களுக்குச் சொல்லு என்றார் அப்படியே அவள் போய் தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷர்களுக்கு அறிவித்தாள், மரியாளுக்குத் தரிசனமான பின்பு அவர் உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை சீஷர்களுக்கு அறிவிக்கக் கல்லறையிலிருந்து ஓடிய மற்ற பெண்களுக்கும் தரிசனமானார் என்று மத்தேயு கூறுகிறார். மத் 28:9. இயேசுவின் வாழ்விலும், சாவிலும் அவரை மிகவும் அதிகமாக நேசித்த தாய்க்குலத்துக்கு இயேசு தனது முதல் இரண்டு தரிசனத்தையும் அருளியது மிகப் பொருத்தமே.

**பேதுருவுக்குத் தரிசனம்:** உயிர்த்தெழுந்த அதே அன்று வேறே ஒரு நேரத்தில் ஆண்டவர் பேதுருவுக்கும் தரிசனமானார். பேதுருவுக்கும், இயேசுவுக்கும் நடந்த உரையாடல் எவ்வாறு இருந்திருக்கும், பேதுரு தான்செய்த தவறுக்காக எப்படி மனம் புழுங்கியிருப்பார். அதை ஆண்டவர் எப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி ஆறுதல் கூறியிருப்பார் என்றெல்லாம் தெரிந்து கொள்ள ஆவலாயிருக்கிறதல்லவா? நாமும் கூட தவறு இழைக்கும் போது ஆண்டவரிடத்தில் மனம் கசந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு திருத்திக் கொள்ள முயற்சித்தால் நம்மையும் தேற்றி, உபயோகிக்க விருப்பம் உள்ளவராக இருக்கிறார்.

**எம்மாவூருக்குப் போகும் வழியில் தரிசனம்:** அதே நாளில் பின்னொரு நேரத்தில் இரண்டு சீஷர்கள் எருசலேமிலிருந்து எம்மாவுக்குப் போய் கொண்டிருந்தார்கள். அவர்கள் வழியில், அந்த நாட்களில் எருசலேமில்

நடந்த சங்கதிகளையும் இயேசுதான் மேசியா என்று அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை அபத்தம் ஆகிப் போனதையும் குறித்துப் பேசிக்கொண்டு போனார்கள். ஆனாலும் சில பெண்கள் கல்லறைக்குப் போனதாகவும். கல்லறை காலியாக இருந்ததாகவும், தேவ தூதன் ஒருவன் அவர் உயிர்த்தெழுந்ததாக அறிவித்ததாகவும் கேள்விப்பட்டது உண்மையாக இருக்குமா? என்றெல்லாம் கூட பேசிக்கொண்டு போனார்கள்.

அவர்கள் நடந்து போகையில் அவர்களோடு பயணத்தில் ஆண்டவர் சேர்ந்து கொண்டார். ஆனாலும் அவரை யார் என்று அவர்கள் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் விசனத்தோடே உரையாடிக் கொண்டிருந்த சங்கதி எதைப் பற்றியது என்று கேட்டார். அதற்கு அவர்களில் ஒருவன் இந் நாட்களில் எருசலேமில் நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ? என்றான், எந்தக் காரியங்களை என்று இயேசு கேட்டார். நசரேயனாகிய இயேசு என்பவர் செய்த எல்லா மகத்துவமான காரியங்களையும் அவர் மூலமாக யூத மக்களுக்கு விமோசனம் பிறக்கும் என்று எல்லா மக்களும் நம்பிக் கொண்டிருந்த காரியங்களையும் விவரித்துச் சொன்னார்கள், இயேசு உயிரோடு இருக்கிறார் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அது சில பெண்களுக்கு தேவ தூதன் தோன்றி சொன்னதாக வதந்தி, எப்படியாகுமோ? என முடித்தனர்.

இயேசு அவர்களை நோக்கி "தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிப்பதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே கிறிஸ்து இவ்விதமாய் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா? "" என்று சொல்லி மோசே முதலிய தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களில் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் கண்பித்தார். அதற்குள் ஊர் சமீபித்து விட்டது. இயேசு அதற்கு அப்பால் போகிறவர் போல அவர்களிடம் நடித்தார். அவர்களோ எங்களோடு வந்து தங்கியிரும், இருட்டும் நேரமாயிற்றே என்று அன்புடன் அழைத்தார்கள். அவரும் சம்மதித்து உள்ளே போனார், உணவு உட்கொள்ள உட்கார்ந்து அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவரை அடையாளம் கண்டு கொண்டனர். உடனே அவர் அவர்களுடைய கண்களுக்கு மறைந்து போனார். அப்பொழுது ஆச்சரியத்தில் ஒருவரையொருவர் பார்த்து, வழியிலே நம்முடனே பேசி வேதவாக்கியங்களை நமக்கு விளக்கிக்காட்டின பொழுது நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்து விட்டு எரியவில்லையா? என்று சொல்லிக்கொண்டனர்.

**எருசலேமில் பதினொரு பேர்:**

அந்நேரமே அவர்கள் எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பிப் போய் பதினொருவரும், அவர்களோடிருந்தவர்களும் கூடியிருந்த இடத்துக்குச் சென்று வழியில் நடந்தவைகளையும் அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள். பேதுருவும் தனக்குக் கிடைத்த

தரிசனத்தைக் கூறினார். மகதலேனா மரியாளும் இயேசுவை நான் கண்டேன் என்று கூறினாள், ஆனால் சீஷர்கள் நம்பிக்கையில்லாமல் இருந்தார்கள், சீஷர்கள் யூதத்தலைவர்களுக்குப் பயந்ததினால் கதவு-களைப்பூட்டி வைத்துக் கொள்ளுவார்கள், ஏனெனில், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற செய்தி சீஷர்களால் பரவாதப்படிக்கு அவர்கள் இவர்களை துன்புறுத்துவர் என்ற பயம். மாற்கு இதைப்பற்றிக் கூறும்போது, "அவர் உயிரோடிருக்கிறாரென்றும், அவர்களுக்கு காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது நம்பவில்லை" என்கிறார். மாற்கு 16:11 அப்படியே கல்லறை காலியாக இருந்தாலும் மீண்டும் இயேசு இந்த பூமியில் சரீரத்தோடே நடமாடமாட்டார் என்பது அவர்கள் எண்ணம் போலும்!

**இயேசு மறுபடியும் தரிசனமானார் :-** சீஷர்கள் பூட்டப்பட்ட வீட்டுக்குள் இருந்தார்கள். இயேசு வந்து அவர்கள் நடுவே நின்றதைப் பார்த்த அவர்கள் ஒரு ஆவியைப் பார்ப்பதாக எண்ணிப் பயப்பட்டார்கள், அப்பொழுது அவர்கள் சந்தேகப்பட்டதைக் குறித்துக்கடிந்து கொண்டு (லூக் 24:27) தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்குக் காண்பித்து, என்னைத் தொட்டுப்பாருங்கள். நீங்கள் காண்கிறது போல எனக்கு மாமிசமும், எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று விளக்கினர். தாம் சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் என்பதை சந்தேகமற நிரூபிப்பதற்காக புசிப்பதற்கு இங்கே ஏதாவது உண்டா என்று கேட்டார். அப்பொழுது பொரித்த மீன் கண்டத்தையும், தேன் கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள், அவர்களுக்கு முன்பாக அதைப் புசித்தார்,

இந்த நிகழ்ச்சியின் போது தோமா இல்லை. இதைக் குறித்து அறிவிக்கப்பட்டபோது தோமா நம்ப மறுத்து அவருடைய கைகளில் ஆணிகளால் உண்டான காயத்தைக் கண்டு அதின் என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டுத் திருப்தியடைந்த பின்னரே விசுவாசிப்பேன் என்று கூறினன். வரலாறு தோமாவை "சந்தேகப் பேர்வழி" என்று முத்திரை போட்டுவிட்டது ஆனாலும், மற்ற சீஷர்கள் ஒன்றும் பெரிய விசுவாசிகள் என்று கூறிவிடமுடியாது. அவர்களும், திறந்த கல்லறையைப் பார்த்த பிறகும், மகதலேனா மரியம்மாள் ஆண்டவர் எனக்கு தரிசனமானர் என்று கூறியதையும் பேதுரு: கர்த்தரை நான் கண்டேன் என்று சொன்னதையும், எம்மாவூர் வழிப் போக்கர்கள் வந்து கூறினதையும். கர்த்தரே அவர்களுக்கு நேரில் காட்சி தரும் வரையில் நம்பவில்லையே.

**தோமா நம்பினர் :** மறுபடியும், எட்டுநாளைக்குப் பிறகு அதே போன்று பூட்டப்பட்ட வீட்டுக்குள் சீஷர்கள் இருந்தார்கள். தோமா-வும் கூட இருந்தார். இயேசு அவர்கள் நடுவே வந்து நின்று "உங்களுக்குச் சமாதானம் என்றார்; பின்பு அவர் தோமாவை நோக்கி; நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றார் தோமாவுக்கு அந்த அளவுக்கு நிரூபணம் தேவைப்படவில்லை. அவரைப் பார்த்ததே போதும், என் ஆண்டவரே, என் தேவனே என்று குழைந்து போனான். அப்பொழுது இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று காலகாலத்துக்கும் பொருந்தும்படி பதில் அளித்தார்.

**இயேசு கலிலேயாவில் தரிசனமானார் :**

இயேசு மரிப்பதற்கு முன்பு தமது சீஷர்களுக்கு கலிலேயாவில்

அவர் குறித்திருந்த மலைக்குப் போகும்படி சொல்லியிருந்தார். அங்கே அவர் தரிசனமான பெண்களுக்கும், "தம்முடைய சீஷர்களைக் கலிலேயாவுக்குப் போகும்படி சொல்லுங்கள். அங்கே அவர்களை சந்திப்பேன்" என்று சொல்லி இருந்தார். குறைந்தது இரண்டு முறை கலிலேயா-வில் தரிசனம் தந்தார். ஒரு சமயத்தில் அவர்களுடைய சீஷர்களில் ஏழு பேர் மீன் பிடிக்கப் போயிருந்தார்கள். அவர்கள் இராமுழுதும் முயன்றும் ஒரு மீனும் அகப்படவில்லை. விடியற் காலையில் இயேசு கடற்கரையில் நின்று கொண்டிருந்தார். ஆனால் யாருக்கும் அது இயேசு என்று தெரியவில்லை என்று அறிந்து படகின் வலது பக்கமாக வலையைப் போடுங்கள், என்று ஆலோசனை சொன்னார். அவர்கள் அப்படியே செய்து வலை கிழிந்து போகத்தக்கதாக திரளான மீன்-களைப் பிடித்தார்கள்.

முன்பு ஒரு முறை இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததை (லூக்-5:1-10) நினைவு கூர்ந்த யோவான் பேதுருவை விளித்து, அது கர்த்தர் என்று மகிழ்ச்சிக் குரல் எழுப்பினான். பேதுரு இதைக் கேட்டதும் உற்சாக மிகுதியினால் தன் மேல் வஸ்திரத்தை தூர எறிந்து விட்டு கடலிலே குதித்து நீந்திக் கரை சேர முற்பட்டான். மற்ற சீஷர்கள் மீன்கள் நிரம்பிய வலையை இழுத்துக் கொண்டு, படகிலேயே கரைக்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள்ளாக தாமே தயாரித்த சிற்றுண்டியை உண்ண சீஷர்களுக்கு அழைப்பு விடுத்தார். இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குத் தரிசனமானது இது மூன்றாவது முறை. இயேசு சீஷர்களைக் காத்திருக்கும்படி சொன்ன அந்த கலிலேயா மலையில் கூட தரிசனமானார். ஒரு வேளை ஐந்நூறுக்கும் மேற்பட்ட அதிகமான பேருக்கு தரிசனமானார் என்று சொல்லப்படுகிற சம்பவம் இதுவாக இருக்கலாம். ஏனெனில், இதைத் தவிர இவ்வளவு பேருக்கு ஒரே சமயத்தில் தரிசனமான விஷயம் வேதாகமத்தில் வேறு எங்கும் சொல்லப்படவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் 15 ம் அதிகாரத்தில் இயேசு யாக்கோபுக்கும் தரிசனமானார் என்று குறிப்பிடுகின்றார். அது கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபாக இருக்கக் கூடும். ஏனெனில், செபதேயுவின் குமாரன் யாக்கோபு, பவுல் கொரிந்தியர் நிருபத்தை எழுதும் முன்பே இறந்து போனான். அல்பேயுவின் குமாரரான யாக்கோபு ஆதித் திருச்சபையில் அவ்வளவு முக்கியமானவராகத் தென்படுவ-தில்லை. யாக்கோபுக்கும், இயேசுவுக்கும் எப்படிப்பட்ட உரையாடல் நடந்திருக்கும் என்று அறிய நமக்கு ஆவல் இருக்கிறது. ஆனால் எழுத்தில் எதுவும் இல்லை.

**பரமேறுதல் :**

வேத வாக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ள இறுதி தரிசனம் பரமேறும் போதும் நடந்திருக்கிறது. அவர் பதினொரு அப்போஸ்தலர்களையும் பெத்தானியாவுக்கு வரும்படி அழைத்தார். அங்கே அவர்களுக்கு தம்முடைய இறுதிக் கட்டளை கொடுத்தார், பின்னர் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர் மேகங்களின் ஊடே எடுத்துக் கொள்ளப்பட்டார்.

அவர் பிரிந்து போகையில், திடீரென்று வெள்ளுடை தரித்த இரண்டு நபர்கள், அவர்கள் அருகாமையில் நின்று, அவர் எப்படி எடுத்துக் கொள்ளப்பட்டாரோ அப்படியே திரும்பி வருவார், அதற்கும் பிறகு அவர்கள் மகிழ்ச்சியோடு எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள். தேவகுமாரன் உயிர்த்தெழுந்தார், இந்தப் பேருண்மையை அடித்தளமாகக் கொண்டு நம்முடைய விசுவாசத்தைக் கட்டுவோம். அவரைப் பார்த்து பேசியவர்களின் சாட்சியம் நமக்கு இருக்கிறது. உயிர்த்தெழுதல் நடந்த காலத்தில் எருசலேமிலும், ஏனைய ஊர்களிலும் என்ன சம்பவித்தது என்பதற்குச் சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன.

பவுல் கூறுகிறது போல இது எங்கோ ஒரு மூலையில் நடந்த சம்பவமல்ல.

லீன் ரோட்ஸ்,

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9:00to 9:15 P. M'
Fridays-7:45 to 8:00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9:15 P. M.
Thursdays-9:00to 9:15 P. M.
Fridays-9 :00 to 9:15 P. M.
Sundays-12: 45 to 1:00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2: 30 to 2: 45 P. M.
Tuesdays-2: 30 to 2; 45 P. M.
Thursdays-2: 30 to 2: 45 P. M
Fridays-2 : 30 to 2 : 45 P. M.
Saturdays-2: 30 to 2: 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5: 30 to 5: 45 P. M.
Thursdays-6; 45 to 7: 00 P M.
Sundays-6 : 45 to 7: 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3: 45 to 4: 00 P. M.
Fridays-3: 45 to 4: 00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

## வேதாகமப் பேருண்மைகளை தெளிவாக கற்றுக் கொள்ள விரும்பும் சான்றோர்களுக்கு ஓர் நற்செய்தி.

கிறிஸ்தவ மார்க்கத்தின் ''முதுகெலும்புக் கொள்கைகள்'' என்று வர்ணிக்கப்படும் பரிசுத்த ஆவி, ஆயிர வருட அரசாட்சி, இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, உலக முடிவு ஆகியவைகளைப் பற்றி விரிவான, விளக்கமான, தெளிவான, முறையில் வேதாகம ஆய்வு நடத்த உத்தேசித்துள்ளோம். விருப்பப்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம். முற்றிலும் இலவசம். அனைத்துச் சமயத்தினரும் கலந்து கொள்ளலாம்.

இடம்: 2. மணல்மேடு வீதி, ஈரோடு - 638002

காலம்: 1989 ஏப்ரல் 2 ஞாயிறு முதல் மே 28 ஞாயிறு வரை

நாட்கள்: ஞாயிறு வியாழன். நேரம்: மாலை 7 மணி–8 மணி

போதிப்பவர்: சகோ E. Z. செல்வநாயகம்,
ஆசிரியர்: திருமறை ஆசான், ஈரோடு.

பொருள்: பரிசுத்த ஆவியானவர்

நடத்துநர்: கிறிஸ்துவின் சபையார், ஈரோடு – 638002

பி-கு. குறைந்தது 15 வகுப்புக்களாவது கலந்து கொள்பவர்களுக்கு நேர்த்தியான சான்றிதழும், பரிசும் உண்டு.

Published by Church of chirst and Printed by Sri. VelaE.V.Rajamanickam, at Vela Printers, Erode-638 001.Phone : 74878
Editor: E. Z. Selvanayagem

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to;
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.